


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 355 17.06.2026 WEDNESDAY AANI : 3 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 355 17.06.2026 புதன்கிழமை ஆனி : 3 விலை : ரூ.5/–

## ரூ.75,000 வரை

# “பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி”

## முதல்வர் விஜய் உத்தரவு




சென்னை: ஜூன்.17-
கூட்டுறவு வங்கிகளின் மூலம் ரூ.75,000 வரை பயிர்க்கடன் பெற்ற குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிகளுக்கு 100 சதவீதம் முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்து தமிழக முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “தமிழக முதல்வர் விஜய் 2026 மே 25ம் தேதியில் ரூ.50,000 வரை பயிர்கடன் பெற்ற குறு, சிறு விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்து பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டம் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மாநிலம் முழுவதிலும் இருந்து இவ்விவசாய கடன் தள்ளுபடி குறித்து மறு பரிசீலனை செய்ய பல்வேறு தரப்புகளில் இருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன. தமிழக முதல்வர் மேற்கண்ட கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலனை செய்ய உத்திரவிட்டதற்கு இணங்க மேற்கண்ட பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தினை மறு ஆய்வு செய்திட ஜூன் 15ம் தேதி அன்று தலைமைச் செயலகத்தில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இம்மறு ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் விஜய் தலைமையில் விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக, வேளாண்மை உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களுடன் மறு பரிசீலனை செய்யப்பட்டது.

இந்திய ரிசர்வ் வங்கியின் 2025ம் ஆண்டு நவம்பர் 28ம் தேதியிட்ட அரசு கடன் தள்ளுபடி திட்டங்களுக்கான மாதிரி செயல்பாட்டு நடைமுறைகளின்படி, பயிர்க்கடன் தள்ளுபடிக்கான முழுத் தொகையையும் அரசானது 45 முதல் 60 நாட்களுக்குள் முழுமையாக செலுத்த வேண்டும் என்ற வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு அரசின் இன்றைய நிதி நிலை மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், கூட்டுறவு வங்கிகளில் 2025ம் ஆண்டு மே 1ம் தேதி முதல் 2026ம் ஆண்டு பிப்ரவரி 28ம் தேதி வரை பயிர் கடன் பெற்ற 14.43 லட்சம் விவசாயிகளுக்கு சுமார் ரூ.6,000 கோடி வரை கீழ்க்கண்டவாறு தள்ளுபடி செய்ய தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

தள்ளுபடி விவரம் வருமாறு:

குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிக்கான தள்ளுபடி (ரூபாயில்) 75,000 வரை பெற்றவர்களுக்கு கடன் தொகை முழுவதும் (100%) தள்ளுபடி.

ரூ.75,000க்கும் மேல் கடன் தொகை பெற்ற குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிக்கு ரூ.35 ஆயிரம் தள்ளுபடி.

இதன் மூலம் கடந்த நிதியாண்டில் பயிர்க்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் அதிகபட்சமாக ரூ.75,000மும் குறைந்தபட்சமாக ரூ.35,000மும் பணப்பயன் கிடைக்கும்.

இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடி, எதிர்வரும் சாகுபடி பருவத்திற்கு கடன் பெற விரும்பும் விவசாயிகளுக்கு பெருமளவில் பயன்தரும்.

8,33,773 குறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.3,599.67 கோடி

5,16,183 சிறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.1,995.42 கோடி

93,548 இதர பெரு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.337.15 கோடி

ஆக கூடுதல் 14,43,504 விவசாயிகளுக்கு உத்தேச பயிர்க் கடன் தள்ளுபடித் தொகை ரூ.5,932.23 கோடி ஆகும்.

இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் 2025ம் ஆண்டு மே 1ம் தேதி முதல் 2026 பிப்ரவரி 28ம் தேதி வரை கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றுள்ள 14,43,504 விவசாயிகள் பயனடைவார்கள். இதனால் அரசுக்கு ரூ.5,932.23 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.” என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நான் 6 மாதம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா? முதல்வர் விஜய்க்கு மு.க.ஸ்டாலின் கேள்வி



சென்னை: ஜூன்.17-
மக்களின் உயிரும், குழந்தைகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி உள்ள நிலையிலும், நான் 6 மாதம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா ? என்று முதல்வர் விஜய்க்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமுக வலைதள பதிவில்: “Efficientஆன அதிகாரிகளை நியமித்துவிட்டேன்”, “சிங்கப்பெண் படையை அமைத்துவிட்டேன்” என்று சீறிய முதல்வரின் காதுகளுக்கு இந்தச் செய்திகளைப் பார்த்த பிறகாவது, பிஞ்சுகளை இழந்து ஓலமிடும் பெற்றோர்களின் அழுகுரல் கேட்கவில்லையா ?

மக்களின் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு ‘கால்ஷீட்’ எப்போது ?. கிரிமினல்கள் சிறிதும் அச்சமின்றி குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?. சவாலும் சவடாலும் விட்டவர், எப்போது Silent Mode-ல் இருந்து வெளியே வருவார் ?. மக்களின் உயிரும், குழந்தைகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி உள்ள நிலையிலும், நான் ஆறு மாதம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா?. இல்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் போராட்டத்தை எதிர்பார்க்கிறீர்களா?. என்று மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியுள்ளார்.

கும்மிடிப்பூண்டி அருகே புதுப்பேட்டை பகுதியில் 3 வயது பெண் குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பிஹார் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சூழலில், மக்களின் உயிரும், குழந்தைகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி உள்ள நிலையிலும், நான் ஆறு மாதம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைக்கிறீர்களா? என்று முதல்வர் விஜய்க்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.




## மின் கட்டண உயர்வு: பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை அமைச்சர் நிர்மல்குமார் தகவல்

சென்னை: ஜூன்.17-
“ஒவ்வொரு வருடமும் மின் கட்டணத்தை ஆண்டுக்கு அதிகபட்சமாக 6% உயர்த்திக் கொள்ளாலாம் என திமுக ஆட்சியில் கொண்டு வந்த பாலிசியே தவறானது. இதனால் அனைவருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. மின் கட்டண உயர்வு குறித்து முதல்வருடன் ஆலோசனை செய்து, மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்,” என மின் துறை அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, “ஆண்டுதோறும் மின் கட்டணத்தை எவ்வாறு உயர்த்த வேண்டும் என 2022ல் போடப்பட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் கட்டண உயர்வு குறித்து மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து முதல்வர் மற்றும் அதிகாரிகளிடம் ஆலோசனை செய்துவிட்டு, முடிவெடுக்கப்படும். ஒவ்வொரு வருடமும் மின் கட்டணத்தை ஆண்டுக்கு அதிகபட்சமாக 6% உயர்த்திக் கொள்ளாலாம் என திமுக ஆட்சியில் கொண்டு வந்த பாலிசியே தவறானது. இதனால் அனைவருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

சிறைச்சாலைகளில் தேவையில்லாமல் டிரன்ஸ்பர்கள் நடப்பதாக புகார் வந்துள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். வெளிப்படைத் தன்மையுடன் இனி டிரான்ஸ்பர்கள் நடக்கும்.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

## நீட் மறுதேர்வு முடியும் வரை ‘டெலிகிராம்’ செயலிக்கு இந்தியாவில் தடை




புதுடெல்லி: ஜூன்.17-
நீட் மறுதேர்வு வரும் ஜூலை 2ம் தேதி நடைபெறுகிறது. இந்நிலையில், இந்தத் தேர்வு முடியும் வரையில் டெலிகிராம் மெசேஜிங் செயலிக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் பிறப்பித்துள்ளது. இதை தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கைக்காக நீட் (யுஜி) நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. அந்த வகையில், நடப்பு கல்வி ஆண்டு சேர்க்கைக்கான நீட் தேர்வு மே 3ம் தேதி நடந்தது. வினாத்தாள் கசிந்ததால் அத்தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும் நீட் மறுதேர்வு ஜூன் 21ம் தேதி நடத்தப்படும் என்றும் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்தது.

நீட் வினாத்தாள் கசிவு விவாகரத்தை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்தன. சமூக வலைதளம் மூலம் பிரபலமான கரப்பான் பூச்சி ஜனதா கட்சி, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் போராட்டம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், நீட் மறுதேர்வுக்கான ஹால் டிக்கெட்டை தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து வருகின்றனர்.

இச்சூழலில், இந்த தேர்வு முடியும் வரையில் டெலிகிராம் மெசேஜிங் செயலிக்கு தடை விதிக்க வேண்டும் என அரசுக்கு தேசிய தேர்வு முகமை பரிந்துரைத்துள்ளது. அதன்படி மத்திய அரசு அந்த செயலிக்கு தடை விதித்துள்ளது. இது தொடர்பாக தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

அரசின் இந்த வழிகாட்டுதலை தேசிய தேர்வு முகமை வரவேற்கிறது. தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000இன் பிரிவு 69ஏன் கீழ் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தியாவில் ‘டெலிகிராம்’ அக்சஸ், நீட் மறுதேர்வு நடைபெற்று முடியும் வரை தடை செய்யப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதோடு இந்தச் செயலியில் ஜூன் 30 வரை மெசேஜ் எடிட்டிங் அம்சத்தை தற்காலிமாக தடை செய்யுமாறும் கோரியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

டெலிகிராம்: கடந்த 2013ல் அறிமுகமான மெசேஞ்சர் செயலிதான் டெலிகிராம். இதனை பாவெல் துரோவ் மற்றும் அவரது சகோதரர் நிகோலா துரோவ் இணைந்து தொடங்கினர். நிதி மற்றும் ஐடியாலஜி சார்ந்த பணியை பாவெலும், டெக்னிக்கல் சமாச்சாரங்களை நிகோலாவும் கவனித்துக் கொள்கின்றனர்.

தனிநபர்களுக்கு இடையே, குரூப் மற்றும் சேனல்ஸ் என இதன் பயனர்கள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். இதன் குரூப் சேட்டில் இரண்டு லட்சம் பயனர்கள் வரை அனுமதிக்கப்படுகிறார்கள். துபாயை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் டெலிகிராம் தளத்தில் 950 மில்லியன் பயனர்கள் ஆக்டிவாக பயன்படுத்தி வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. வாட்ஸ்அப்பில் உள்ள அனைத்து அம்சங்களும் இதில் உள்ளன.

இதில் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் ஆக்டிவாக செயல்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. இதில் சுமார் 2 லட்சம் பேர் வரை இணைந்து செயல்படும் சூப்பர் குரூப் அம்சம் உள்ளது. அதனால் போலிச் செய்திகளை பகிர்வது மிக சுலபம் என தொழில்நுட்ப வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக நீட் மறுதேர்வு முடியும் வரை இந்தியாவில் இந்த செயலி தடை செய்யப்பட்டுள்ளது.

## ஒரு வாக்கு வித்தியாசம்: திருப்பத்தூர் தவெக எம்எல்ஏவின் வெற்றியை எதிர்த்து முன்னாள் அமைச்சர் பெரியகருப்பன் வழக்கு

சென்னை, ஜூன்.17-
ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற, திருப்பத்தூர் தொகுதி தவெக எம்எல்ஏ சீனிவாச சேதுபதியின் வெற்றியை எதிர்த்து, திமுக முன்னாள் அமைச்சர் பெரியகருப்பன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட சீனிவாச சேதுபதி, திமுக வேட்பாளரான பெரிய கருப்பனை விட ஒரு வாக்கு அதிகம் பெற்று பெற்றி பெற்றார். இந்த வெற்றியை எதிர்த்து பெரியகருப்பன், சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் பதிவான தபால் வாக்கு, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்கு அனுப்பப்பட்டு நிராகரிக்கப்பட்டு விட்டதால் மறுவாக்கு எண்ணிக்கை நடத்த உத்தரவிட வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் பெரிய கருப்பன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், தவெக எம்.எல்.ஏ. நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்க தடை விதித்தது. அந்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# அலங்காநல்லூரில் சுதந்திர போராட்ட தியாகி விஸ்வநாததாஸ் 140 வது பிறந்தநாள் விழா

அலங்காநல்லூர், ஜூன்.17-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் சுதந்திரப் போராட்டத் தியாகி எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் 140 வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. மருத்துவர் நலச் சங்கத்தின் சார்பில் அலங்காநல்லூர் ஸ்ரீ முனியாண்டி கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபாடு நடத்தப்பட்டது. பின்னர் மேளதாளங்கள் வானவேடி முழங்க அவரது படத்திற்கு மருத்துவர் சங்க நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். தொடர்ந்து 50க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் திருமங்கலம் பகுதியில் அமைந்துள்ள சுதந்திர போராட்ட தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபத்திற்கு சென்றனர். இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை அலங்காநல்லூர் ஒன்றிய மருத்துவர் நல சங்கத்தினர் செய்திருந்தனர்.

# தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியுடன்!

தென்காசி, ஜூன்.17-
தென்காசி மாவட்டத்தில் 20262027 ஆம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம் ரூ.208,050 இலட்சத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் பரப்பு விரிவாக்க இனத்தின் கீழ் தக்காளி, கத்தரி, மிளகாய் ஆகிய காய்கறி குழித்தட்டு நாற்றுகள், வெங்காயம், வெண்டை, மல்லி போன்ற வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள், மா, கொய்யா, எலுமிச்சை, அவோகாடோ, நெல்லி, ரோஜா, மல்லிகை,



போன்ற நடவுசெடிகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளன.மேலும் பழைய மாந்தோப்புகளை புதுப்பித்தல். ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மகரந்த சேர்க்கையை ஊக்குவித்து பயிர் மகசூலை அதிகரிப்பதற்கான தேனீ காலனிகள், தேனீ வளர்ப்பு பெட்டிகள், தேன் பிரித்தெடுக்கும் கருவி. நடமாடும் காய்கறிகள் விற்பனை வண்டி போன்றவை 4050 % மானியத்தில் வழங்கப்பட உள்ளன. மேலும் நீர் சேமிக்கும் அமைப்பு, நிழல்வலைகுடில், பசுமைக்குடில், குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்கு அமைத்தல் போன்ற திட்ட இனங்கள் பின்னேற்பு மானியத்தில் வழங்கப்படுகிறது.மேற்கண்ட திட்ட இனங்களில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் நில உடைமை ஆவணங்களான பட்டா/ சிட்டா நகல், ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் 2 மற்றும் அடங்கல் உள்ளிட்டவற்றை சம்பந்தப்பட்ட வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பித்து பயன்பறலாம். விவசாயிகள் MIDH-Suraksha portal-Lல் பதிவு செய்தும் பயன்பறலாம். மேலும் கூடுதல் விவரங்களுக்கு விவசாய பெருமக்கள் அனைவரும் தங்கள் அருகில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

# சென்னை உயர்நீதி மன்றத்தின் ஆணைப்படி ஓய்வு பெற்ற நீதிபதி செல்வம் நீதியரசர் மாநகராட்சி பகுதிகளில் ஆய்வு

சென்னை, ஜூன்.17-
சென்னை உயர்நீதி மன்றத்தின் ஆணைப்படி ஓய்வு பெற்ற நீதிபதி செல்வம் நீதியரசர் மாநகராட்சி பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார். மதுரை மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பாராமரிப்பற்ற பட்டா நிலங்களில் பரவலாக வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் வகையில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய உத்தரவின்படி மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தின் நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் அமைந்துள்ள கண்மாய், குளம், ஏரி, ஆறு, கால்வாய், ஓடை உள்ளிட்ட நீர்நிலை அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பிற அரசு நிலங்கள், மேலும் பாராமரிப்பற்ற தனியார் பட்டா நிலங்களில் தானாக வளர்ந்து பரவியுள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்று மதுரை மாநகராட்சியில் பொன்மேனி ஊரணி, கோச்சடை, தத்தனேரி பகுதிகளில் மற்றும் திருப்பரங்குன்றம் வட்டத்தில் விளாச்சேரி கம்மாய் திருநகர் சேமட்டான் ஊரணி, வாடிப்பட்டி வட்டத்தில் வயலூர், வைவரநத்தம் ஆகிய இடங்களில் நீர்நிலை மற்றும் நீர்நிலை அல்லாத அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் தனியார் பட்டா நிலங்களில் சீமை கருவேலை மரங்கள் வளர்ந்துள்ள பரப்பு, இதுவரை அகற்றப்பட்ட பரப்பு மற்றும் அகற்றப்பட வேண்டிய பரப்பு தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதிசெல்வம், நீதியரசர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# கோபியில் செங்கோட்டையன் வெற்றிக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அதிமுக வழக்கு


சென்னை, ஜூன்.17-
கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில், தமிழக அமைச்சர் செங்கோட்டையன் வெற்றியை எதிர்த்து அதிமுக வேட்பாளர் பிரபு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட செங்கோட்டையன், தன்னை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் நல்லசிவத்தை விட 16,620 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். செங்கோட்டையனின் வெற்றியை எதிர்த்து, கோபிசெட்டிப்பாளையம் அதிமுக வேட்பாளர் பிரபு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், வேட்புமனுவில்,



சொத்து, குற்ற வழக்கு விவரங்கள் தெரிவிக்கும் பிரமாணப் பத்திரத்தில் தகவல்களை சான்றளித்து கையெழுத்திட்டுள்ள நோட்டரி வழக்கறிஞரின் உரிமம் காலாவதியாகி விட்டது. அதனால் அந்த வேட்புமனுவை ஏற்றது முறையற்றது என்பதால், செங்கோட்டையன் வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேபோல, லால்குடி தொகுதியில், தவெக வேட்பாளரை விட 2,739 வாக்குகள் அதிகம் பெற்று, வெற்றி பெற்ற அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸின் வெற்றியை எதிர்த்து, தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் பாரிவள்ளல் சார்பில் வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.
அந்த மனுவில், ஏழு நிறுவனங்களில் தனக்குள்ள பங்குகள் குறித்த விவரங்களை லீமா ரோஸ் மறைத்துள்ளதாகவும், அதிமுக துண்டு அணிந்து கொண்டு, தேவாலயங்களில் பிரச்சாரம் செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.
இதேபோல, புதுக்கோட்டை தொகுதியில், 1,867 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற திமுக எம்எல்ஏ முத்துராஜாவின் வெற்றியை எதிர்த்து தவெக வேட்பாளர் ஷெரீப் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் 6.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

ஜகர்தா, ஜூன்.17-
இந்தோனேசியாவில் இன்று காலை 6.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வலுவான நில அதிர்வுகளும் ஏற்பட்டன.



செவ்வாய்க்கிழமை காலை பாலி மற்றும் மத்திய சுலவேசியின் சில பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். நில அதிர்வுடன் தொடர்ந்த நிலநடுக்கம் ஒரு நிமிடத்திற்கும் மேலாக வலுவாக நீடித்தது. இதனால் ஏற்பட்ட சேதம் அல்லது உயிரிழப்புகள் குறித்த எந்தத் தகவலும் உடனடியாகக் கிடைக்கவில்லை.
மத்திய சுலவேசி மாகாணத்தின் தலைநகரான பாலியிலிருந்து 46 கிலோமீட்டர் கிழக்குதென்கிழக்கில் இந்த நிலநடுக்கத்தின் மையம் இருந்தது. இது சுமார் 10 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மற்றொரு நிலநடுக்கம் 5.2 ரிக்டர் அளவில் பதிவானது.
அரசு அதிகாரிகளின் தகவல்படி, பாலி, சிகி, டோங்கலா மற்றும் டோஜோ உனாஉனா ஆகிய பகுதிகளில் நிலநடுக்க அதிர்வுகள் கடுமையாக உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர் நில அதிர்வுகள் காரணமாக சுனாமி குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள் கடற்கரைப் பகுதிகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.
இந்தோனேசியா என்பது அடிக்கடி நிலநடுக்கங்களும், எரிமலை வெடிப்புகளும் சாதாரணமாக நிகழும் நாடாக உள்ளது. ஜூன் மாதத்தில் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள இரண்டாவது சக்திவாய்ந்த நிலநடுக்கம் இதுவாகும். முன்னதாக, ஜூன் 8 அன்று பிலிப்பைன்ஸில் 7.7 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. 2021ம் ஆண்டு ஜனவரி மாதம், சுலவேசி தீவில் உள்ள மமுஜு நகருக்கு அருகே ஏற்பட்ட 6.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தில் 100 பேர் உயிரிழந்தனர்.

# மூடப்பட்ட 717 டாஸ்மாக் கடைகளின் பட்டியல்: அமைச்சர் விக்னேஷ் வெளியிட்டார்

சென்னை, ஜூன்.17-
தமிழக அரசு மூடிய 717 டாஸ்மாக் கடைகளின் பட்டியலை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் வெளியிட்டார்.தமிழகத்தில் 4,765 டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடைகள் இயங்கி வந்த நிலையில், தமிழக முதல்வராக விஜய் பொறுப்பெற்ற பின், வழிபாட்டு தலங்கள், கல்வி நிறுவனங்கள், போக்குவரத்து முனையங்கள் அருகில் இருக்கும் 717 டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட்டார்.இதையடுத்து, அத்தகைய கடைகளை மூடும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்கிடையே, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், 'அரசால் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கடைகள் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டபோது, அதை வெளியிட அரசு மறுப்பதாக குற்றம்சாட்டினார்.இந்நிலையில், அரசு அறிவிப்பின்படி 717 கடைகள் மூடப்பட்டதாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் தெரிவித்துள்ளார். மேலும், மூடப்பட்ட கடைகளின் பட்டியலையும் வெளியிட்டுள்ளார்.அதில் கடைகளின் எண், எந்த மாவட்டத்தில் மற்றும் மண்டலத்தில், மொத்தம் எத்தனை கடைகள் மூடப்பட்டுள்ளன என்ற தகவல்கள் இடம் பெற்றுள்ளன. அதன்படி, மதுரை மண்டலத்தில் அதிகபட்சமாக 290 கடைகள் மூடப்பட்டுள்ளன.இந்த மண்டலத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் 63 கடைகளும், விருதுநகர் மாவட்டத்தில் 42 கடைகளும், மதுரை தெற்கில் 39, திருநெல்வேலி 33, ராமநாதபுரத்தில் 29, திண்டுக்கல்லில் 25, சிவகங்கையில் 18, மதுரை வடக்கு 13, கன்னியாகுமரியில் 15, தேனியில் 12 கடைகள் மூடப்பட்டுள்ளன.
கோவை மண்டலத்தில் 179 கடைகள் மூடப்பட்டுள்ளன. இந்த மண்டலத்தில் கோவை வடக்கில் 48, ஈரோட்டில் 42, திருப்பூரில் 31, நீலகிரியில் 27, கோவை தெற்கில் 23, கரூரில் 8 கடைகள் மூடப்பட்டுள்ளன. சென்னை மற்றும் சேலம் மண்டலங்களில் தலா 82 கடைகள் மூடப்பட்டுள்ளன. சென்னை மண்டலத்தில் திருவள்ளூர் கிழக்கில் 27 கடைகள், வடசென்னை 13, காஞ்சிபுரம் வடக்கு 10, தென் மற்றும் மத்திய சென்னையில்தலா 9, காஞ்சிபுரம் தெற்கு 8, திருவள்ளூர் மேற்கு 6 கடைகள் மூடப்பட்டுள்ளன.சேலம் மண்டலத்தில் சேலம் மாவட்டத்தில் 22, திருவண்ணாமலை 19, நாமக்கல் 14, வேலூரில் 6, அரக்கோணம், கிருஷ்ணகிரி, தருமபுரியில் தலா 7 கடைகள் மூடப்பட்டுள்ளன. திருச்சி மண்டலத்தில் 84 கடைகள் மூடப்பட்டுள்ளன. இந்த மண்டலத்தில் கடலூரில் 21, புதுக்கோட்டையில் 17, திருச்சியில் 15, விழுப்புரத்தில் 9, நாகையில் 4, திருவாரூர், தஞ்சை, பெரம்பலூரில் தலா 6 கடைகள் மூடப்பட்டுள்ளன



# கடந்த 16 நாட்களில் மது அருந்தி வாகனம் ஓட்டியதாக 16,031 வழக்குகள் பதிவு : காவல் துறை தகவல்

சென்னை, ஜூன்.17-
தமிழகம் முழுவதும் கடந்த 16 நாட்களில் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியவர்கள் மீது போலீசார் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளனர். கடந்த 16 நாட்களில் மது அருந்தி வாகனம் ஓட்டியதாக 16,031 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 14,100 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. விதிமீறல்களில் ஈடுபட்டதாக ரூ.3.13 கோடி அபராதம் வசூல் என காவல்துறை தகவல் அளித்துள்ளது



# ஈரோடு மாவட்டத்தில் தனியார் தோல் தொழிற்சாலை ஊழியர் இயந்திரத்தில் சிக்கி உயிரிழப்பு

ஈரோடு, ஜூன்.17-
சுண்ணாம்பு ஓடை பகுதியில் உள்ள தனியார் தோல் தொழிற்சாலையில், இயந்திரத்தில் சிக்கி ஊழியர் செல்வம் (63) என்பவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பியபின் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# முதல்வர் விஜய் சங்கீதா விவாகரத்து வழக்கில் ஆன்லைனில் ஆஜராக நீதிமன்றம் அனுமதி: விசாரணை ஆக.7க்கு தள்ளிவைப்பு

செங்கல்பட்டு, ஜூன்.17-
முதல்வரும் தமிழக வெற்றிக் கழக தலைவருமான விஜய் அவரது மனைவி சங்கீதா இடையிலான விவாகரத்து வழக்கு செங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.
இதில் இருதரப்பினருக்கும் முக்கியமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதால் வழக்கு புதிய திருப்பத்தை எட்டியுள்ளது.வழக்கில் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளித்து, வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆஜராக அனுமதி வழங்க வேண்டும் என விஜய் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அனுமதி வழங்கியது.தனது சார்பில் ஆஜராகும் வழக்கறிஞருக்கு அதிகாரம் வழங்கியிருப்பதை விஜய் ஆன்லைன் வாயிலாக நீதிமன்றத்தில் தோன்றி உறுதிப்படுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டது.மறுபுறம், சங்கீதா தரப்பில் இதுவரை வக்காலத்து மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கின் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு தேவையான முக்கிய மனு இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அந்த மனுவை தாக்கல் செய்ய சங்கீதாவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அவர் தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞர் யார் என்பதை உறுதிப்படுத்த நீதிபதி அறிவுறுத்தினார். இந்த வழக்கின் விசாரணை ஆக. 7ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

# எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர்

சென்னை, ஜூன்.17-
விராலிமலை தொகுதி அதிமுக எம்எல்ஏவான முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் இன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அவர் தனது ராஜினாமா கடிதத்தை சபாநாயகர் ஜேசிடி பிரபாகரிடம் அளித்தார். சி.விஜயபாஸ்கரின் ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சபாநாயகர் அறி



வித்துள்ளார்.2011 முதல் விராலிமலை தொகுதி எம்எல்ஏவாக தொடர்ந்து 4 வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் சி.விஜயபாஸ்கர். மேலும், 2013ஆம் ஆண்டு முதல் 2021 வரை தமிழக சுகாதாரத் துறை அமைச்சராக அவர் பதவி வகித்தவர்.2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தோல்வியடைந்த பின்னர், எடப்பாடி பழனிசாமிக்கு எதிராகவும், முதல்வர் விஜய்க்கு ஆதரவாகவும் 25 அதிமுக எம்எல்ஏக்கள் வேலுமணி சி.வி.சண்முகம் தலைமையில் அணி திரண்டனர். அந்த அணியில் முக்கியமானவராக சி.விஜயபாஸ்கர் இருந்தார்.அதனைத் தொடர்ந்து, தனக்கு எதிராக போர்க்கொடி தூக்கியவர்களின் கட்சி பொறுப்பினை பறித்த பழனிசாமி, புதிய நபர்களை உடனடியாக நியமித்தார். அப்போது சி.விஜயபாஸ்கரின் கட்சி பதவியும் பறிக்கப்பட்டது. ஒருகட்டத்தில் வேலுமணி அணியை சேர்ந்த எம்எல்ஏக்கள் பலரும் பழனிசாமியுடன் கைகோத்தனர். ஆனாலும், சி.விஜயபாஸ்கர் மட்டும் பழனிசாமியை நேரில் சந்திக்காமல் தவிர்த்தார். அதன்பின்னர் 4 எம்எல்ஏக்கள் பதவியை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்தனர். இந்தச் சூழலில், சி.விஜயபாஸ்கர் தனது எம்எல்ஏ பதவியை இப்போது ராஜினாமா செய்துள்ளார். அவர் அடுத்ததாக தவெகவில் இணைவாரா அல்லது திமுகவில் இணைவரா என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.முன்னதாக இன்று சி.விஜயபாஸ்கர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தலைமை என்பது அதிகாரமோ, ஆணவமோ அல்ல. 'அர்ப்பணிப்பு மிகுந்த அரவணைப்பு'. உழைக்கும் தொண்டர்களின் மனதை வெல்ல முடியாத தலைமை, மக்களின் மனதை எப்படி வெல்லும்?. உணர்வுகளை மதிக்காத இடத்தில் உண்மையான பயணம் சாத்தியமா?' எனக் குறிப்பிட்டிருந்தார்.

## "பாஜகவில் இருந்து விலகிய யாருமே பிரகாசித்தது இல்லை" அண்ணாமலை மீது ஹெச்.ராஜா தாக்கு



காரைக்குடி, ஜூன்.17-
"பாஜகவில் இருந்து விலகி அரசியலில் பிரகாசித்தவர் ஒருவர் கூட கிடையாது" என அண்ணாமலையை பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா மறைமுகமாக விமர்சித்தார். சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "அண்ணாமலை தற்போது பாஜகவில் இல்லாததால் அவரை பற்றி பேச வேண்டியதில்லை. பாஜக சித்தாந்த ரீதியிலான அமைப்பு. காங்கிரஸில் இருந்து வெளியேறியோர் அரசியலில் சிறந்து விளங்கியுள்ளனர். ஆனால், பாஜகவில் இருந்து வெளியேறி அரசியலில் பிரகாசித்தோர் என்று ஒருவர் கூட கிடையாது.அண்ணாமலை இல்லாதபோது, கடந்த 2014ம் ஆண்டு பாஜக கூட்டணி 19 சதவீதம் வாக்குகள் பெற்றது. அண்ணாமலை இருந்தபோது 2024ம் ஆண்டு 18 சதவீதம் தான் பெற்றது.தவெக அரசு சில்லுண்டிகளை சேர்த்துக் கொண்டு பெரும்பான்மையை நிரூபித்துள்ளது. கடந்த 35 நாட்கள் ஆட்சியில் 40க்கும் மேற்பட்ட பாலியல் வன்கொடுமைகள் நடந்துள்ளன. விஜய் பொறுப்புள்ள முதல்வராக நடந்து கொள்ளவில்லை. தீய சக்தி முதல்வராக விஜய் உள்ளார். அரசியல் அனுபவம் இல்லாதோர் அமைச்சர்களாக உள்ளனர்.பொறுப்பற்ற, தான்தோன்றித்தனமாக, மக்கள் மீது அக்கறையற்ற அரசாக உள்ளது. ஆட்சியாளர்கள் கற்பனையிலேயே திரிந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு முழுமையான மக்கள் ஆதரவு இல்லை. மூன்றுவயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப்பேற்று விஜய் முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். தவெக ஆட்சி தமிழகத்துக்கு ஒரு துரதிருஷ்டம்.காவிரி குறுக்கே மேகதாட்டு அணைக் கட்ட மத்திய அரசு அனுமதி வழங்காது. கர்நாடக அரசு கற்பனை செய்துகொண்டு பேசுவதை நாம் ஏன் தடுக்க வேண்டும் ?திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்று நீதிமன்றம் மீண்டும் தீர்ப்பளித்து, ஏற்ற முடியாது என்று அமைச்சர் நிர்மல்குமார் கூறினால், அதன்பின்னர் நான் பதில் சொல்கிறேன்.சிறுபான்மையின மாணவர்கள் மத அடையாளங்கள் இல்லாமல் பள்ளிக்கு வர வேண்டும் என்று கூற பள்ளிக் கல்வித்துறை அமைச்சருக்கு தைரியம் இருக்கிறதா" என்று ஹெச்.ராஜா கூறினார்

## "அதிமுக தனது சுய நிலையை இழந்துள்ளது" பழனிசாமி மீது சி.வி.சண்முகம் விமர்சனம்



விழுப்புரம், ஜூன்.17-
திமுகவுடன் கூட்டணி வைக்க முயன்றதால் அதிமுக தனது சுய நிலையை இழந்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தெரிவித்தார்.
இதுதொடர்பாக நேற்று அவர் திண்டிவனத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பழனிசாமி தலைமையிலான அதிமுக தொடர் தோல்வியை சந்தித்து வருகிறது. மக்களின் நன்மதிப்பையும் இழந்து வருகிறது. யாருடைய கருத்தையும் கேட்க மாட்டேன், குடும்பத்தினர் கருத்தை மட்டும் கேட்பேன், பணம் கொடுப்பவர், பெற்றுத் தருபவர்களின் பேச்சை மட்டும் பழனிசாமி கேட்பதால் நினைத்து பார்க்க முடியாத இழப்பை அதிமுக சந்தித்துள்ளது.
திமுகவை வீழ்த்த வேண்டும் என்ற நோக்கத்துக்காக அதிமுக தொடங்கப்பட்டது. ஆனால், முதல்வராக வர வேண்டும் என்பதற்காக திமுகவுடன் கூட்டணி வைக்க முயன்றதால் அதிமுக தனது சுய நிலையை இழந்துள்ளது. கட்சிக்காக உழைத்தவர்கள் தற்போது இயக்கத்தைவிட்டு செல்கின்றனர். அவர்களின் மனவலியை உணராமல் துரோகி என சாதாரணமாக பழனிசாமி சொல்கிறார்.தேர்தலில் 47 தொகுதிகளில் வெற்றி பெற்றுளேன் என பொய் சொல்கிறார். அதில் 31 தொகுதிகளில் வெற்றி பெற்றது பாமக தயவால்தான். பாமகவுடன் கூட்டணி இல்லை என்றால், வட மாவட்டங்களில் வெற்றி பெற்றிருக்க முடியாது. இதுதான் உண்மை. இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். தவறுகளை பழனிசாமி உணர வேண்டும். தவறுகளை சரி செய்ய வேண்டும்.அதன்பிறகு மீண்டும் எல்லோரும் இணைந்து செயல்படலாம். தனது மகனை அரசியலுக்கு கொண்டு வருவதற்காக, பழனிசாமி தற்போது சமூக வலைதளத் தில் நாடகத்தை நடத்தி கொண்டிருக்கிறார். அதிமுகவின் படுதோல்விக்கு காரணம் பணம் மற்றும் பதவி வெறி. நீங்கள்தான் இப்போதும் பொதுச்செயலாளர். எங்கள் பக்கமும் குறைகள் இருக்கலாம். தலைமை பொறுப்புக்கு வந்தவர், எல்லோரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். இதற்கு நேர்மாறாக, கட்சியில் உள்ளவர்கள் வெளியேறும் நிலையை உருவாக்குகிறார்.பொதுக்குழுவை உங்கள் விருப்பப்படியே ஒரு தேதியில் கூட்ட வேண்டும். அதற்கு காலதாமதம் ஏற்பட்டால் செயற்குழுவை கூட்ட வேண்டும். அதற்கு ஏன் அச்சப்படுகிறீர்கள், மாற்று கருத்தை ஏற்றுக் கொள்ளும் தலைவர்தான் சிறந்த தலைவர். வெற்றிக்காக இறங்கி வர வேண்டும். சரியான பாதைக்கு அதிமுகவை கொண்டு செல்லும் வழிமுறையை கலந்து பேசி முடிவு செய்யுங்கள்.நீங்கள் திமுகவுடன் போக வேண்டும் என்று சொன்ன பிறகு தான், இந்த கருத்துக்கு உடன்பட முடியாது என்று நாங்கள் வெளியே வந்தோம். இந்த ஒரு கருத்தை தவிர, 8 ஆண்டு நீங்கள் சொன்ன அனைத்து கருத்துகளையும் நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம் காலம் நம்மையை விட்டுப் போகவில்லை.
நாங்கள் சில காலம் பொறுத்திருப்போம். எங்களுக்கு என்ன வழிமுறைகள் என்று எங்களுக்கும் தெரியும். அந்த நிலைக்கு எங்களை தள்ள வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகத்தில் சுங்கச்சாவடி கட்டணத்தை ரத்து செய்ய தவாக வலியுறுத்தல்



சென்னை, ஜூன்.17-
சுங்கச்சாவடி கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக்கட்சி வலியுறுத்தியுள்ளது.
இது குறித்து, அக்கட்சி தலைவர் தி.வேல்முருகன் வெளியிட்ட அறிக்கையில், "அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளின் படைகள் ஈரான் மீது கூட்டாக தாக்குதலை கடந்த பிப்.28ம் தேதி நடத்தின. இதற்கு பதிலடியாக ஈரான், உலகின் முக்கிய கச்சா எண்ணெய் போக்குவரத்து வழியான ஹார்மூஸ் ஜலசந்தியை மூடியது. ஈரானின் பதிலடியால் இந்தியாவில் டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு விலை உயர்ந்தது. கடந்த சில ஆண்டுகளில் டீசல் விலை தொடர்ந்து உயர்ந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கக் கட்டணங்களும் ஆண்டுதோறும் அதிகரிக்கப்படுகின்றன. வாகன காப்பீடு, உதிரி பாகங்கள், டயர் விலை, ஓட்டுநர் ஊதியம், பராமரிப்பு செலவுகள் என அனைத்தும் உயர்ந்துள்ளன. தமிழகத்தில் சுமார் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட லாரிகள் இயங்கி வருகின்றன. மாநிலத்துக்குள் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள், கட்டுமானப் பொருட்கள், தொழிற்சாலை உற்பத்திப் பொருட்கள் உள்ளிட்ட பெரும்பாலான பொருட்களின் போக்குவரத்து லாரிகளை சார்ந்தே உள்ளது. இதனால் லாரி வாடகை 25 சதவீதம் உயர்ந்தது .அதன் தாக்கம் பொதுமக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை கணிசமாக உயர்த்தியுள்ளது. இதனால், குடும்ப மாதாந்திர செலவு கணிசமாக அதிகரிக்கும். மூலப்பொருட்கள் உயர்வால் வீடு கட்டும் செலவு மேலும் அதிகரிக்கும். விவசாயிகள் கொண்டு செல்லும் உரம், விதை, விளைபொருட்கள் போக்குவரத்துக் கட்டணம் அதிகரிக்கும். சரக்கு போக்குவரத்து கட்டணம் உயர்வால் சிறு வியாபாரிகளின் லாப விகிதம் குறையும். எனவே, மத்திய அரசிடம் தமிழக அரசு பேசி, சுங்கச்சாவடி கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும். எரிவாயு விலை உயர்வால் பாதிக்கப்பட்ட சிறு வியாபாரிகள் மற்றும் உர விலை உயர்வு, லாரி வாடகை உயர்வால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ 30 ஆயிரம் மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தர வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்

## பழநி பஞ்சாமிர்தம் விலையை உயர்த்தக் கூடாது: விஷ்வ ஹிந்து பரிஷத் வலியுறுத்தல்



மதுரை, ஜூன்.17-
முருகனின் மூன்றாம் படை வீடான பழநியில் பக்தர்கள் விரும்பி பெருமளவு வாங்கும் பஞ்சாமிர்தம் விலையை உயர்த்தக் கூடாது. தரிசன கட்டணங்களையும் உயர்த்தக் கூடாது என விஸ்வ ஹிந்து பரிஷத் மாநில இணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சந்திரசேகரன் வலியுறுத்தியுள்ளார்.
மதுரையில் இது குறித்து பேசிய அவர், "திருப்பதிக்கு அடுத்த படியாக பழநி முருகன் கோயிலுக்கு தினமும் பல்லாயிரக்காணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர் தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவதில் பழநி முருகன் கோயில் முதலிடத்தில் உள்ளது. ஆனால் பழநியில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கிடையாது.
கோடிக்கணக்கான வருவாய் ஈட்டி தரும் இக்கோயிலில் பக்தர்கள் மலைக்குச் சென்று வர கூடுதல் ரோப் கார், வின்ச் உள்ளிட்ட வசதிகளை நவீனப் படுத்தி விரிவாக்கம் செய்ய எந்த நடவடிக்கையும் தமிழக ஆட்சியாளர்கள் எடுக்கவில்லை. தமிழக வெற்றிக் கழக அரசு ஆட்சியில் பழநி பஞ்சாமிர்தம் கட்டணத்தை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. அதுபோல தரிசனக் கட்டணங்களையும் உயர்த்த திட்டமிட்டு இதுகுறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்க அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.தமிழக அரசு உடனடியாக இந்த அறிவிப்பை திரும்பப் பெற வேண்டும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரும்பி வாங்கிச் செல்லும் முருகனின் பிரசாதமான பஞ்சாமிர்தத்தை மேலும் தரம் உயர்த்தி விலையை உயர்த்தாமல் வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும். மேலும் தரிசனக் கட்டணங்களையும் உயர்த்தக் கூடாது" என்று வழக்கறிஞர் சந்திரசேகரன் கூறியுள்ளார்.




## அமைச்சர் ஷாஜகான் மன்னிப்பு கேட்கக் கோரி திமுகவினர் போஸ்டர்: தஞ்சையில் பரபரப்பு

தஞ்சை, ஜூன்.17-
பாபநாசம் தொகுதி எம்எல்ஏவும் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஷாஜகான் திமுகவை விமர்சனம் செய்ததால் ஆத்திரமடைந்த திமுகவினர், அவர் மன்னிப்பு கேட்கக் கோரி தஞ்சையில் ஒட்டிய போஸ்டரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஷாஜகான் அண்மையில் விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசும்போது, திமுகவை விமர்சனம் செய்தும், 50 ஆண்டுகளில் திமுக துடைத்து எரியப்படும் என்றும் பேசினார்.
இதனால் ஆத்திரமடைந்த திமுகவினர், "பாபநாசம் தொகுதியில் திமுக தயவில் வெற்றி பெற்றுவிட்டு, திமுகவை விமர்சனம் செய்யும் பச்சோந்தி ஷாஜஹானே" என்று குறிப்பிட்டு கண்டனம் மற்றும் அமைச்சரின் பேச்சிற்கு மன்னிப்பு கோரியும் பாபநாசம் தொகுதி மற்றும் பேரூர் பகுதிகளில் போஸ்டர்களாக ஒட்டியுள்ளனர். இதுகுறித்து தகவலறிந்த போலீஸார், தொகுதியில் அமைச்சரை கண்டித்து ஒட்டப்பட்ட போஸ்டர்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.
மேலும் போஸ்டர் ஒட்டியவரிடம் இருந்த 100க்கும் மேற்பட்ட போஸ்டர்களை பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அமைச்சரை கண்டித்து பாபநாசம் பகுதியில் போஸ்டர் ஒட்டப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## தமிழ்நாட்டின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிட்டார் அமைச்சர் மரிய வில்சன்

சென்னை, ஜூன்.17-
தமிழ்நாட்டின் நிதி நிலை குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிட்டார் அமைச்சர் மரிய வில்சன். தற்போதைய பொருளாதார நிலை, தமிழ்நாடு அரசின் கடன் உள்ளிட்டவை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது. தலைமைச் செயலகத்தில் நடக்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் நிதிமேலாண்மை பற்றி வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது

## பரங்கிப்பேட்டையில் ஹைட்ரோகார்பன் திட்டத்தை அரசு அனுமதிக்கக் கூடாது சிபிஎம்

கடலூர், ஜூன்.17-
பரங்கிப்பேட்டையில் ஹைட்ரோகார்பன் திட்டத்தை அரசு அனுமதிக்கக் கூடாது என்று சிபிஎம் கூறியுள்ளது. பாதுகாப்பு, பல்லுயிர் பெருக்கம், கடல் வளம், மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழித்தொழிக்கும். இந்துஸ்தான் எண்ணெய் நிறுவனத்தின் ஹைட்ரோகார்பன் திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. கடலூர் மாவட்ட சுற்றுச்சூழலை சீரழிக்கும் நிலையை ஹைட்ரோ கார்பன் கிணறுகள் உருவாக்கும் என்று பெ.சண்முகம் கூறியுள்ளார்



## "வினாத்தாள் கசிவால் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு துணை நிற்போம்" பிரியங்கா காந்தி



புதுடெல்லி,ஜூன்.17-
வினாத்தாள் கசிவால் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு நாம் அனைவரும் துணை நிற்க வேண்டும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளரும், எம்.பியுமான பிரியங்கா காந்தி வலியுறுத்தியுள்ளார்.
தேர்வுத்தாள் கசிவு காரணமாக பாதிக்கப்படும் மாணவர்களுக்காக ராகுல் காந்தி தலைமையில் ராஜஸ்தானின் கோடா நகரில் நாளை நடைபெற உள்ள மாணவர் மாநாடு குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த பிரியங்கா காந்தி, "பொதுமக்களின் நலனில் அக்கறையும் பொறுப்பும் உள்ள நாம் அனைவரும் மாணவர்களுடன் துணை நிற்க வேண்டும். அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும் துயரங்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு தேர்வுக்கு முன்பும் வினாத்தாள் கசியவிடப்படுகிறது. அதேவேளையில், தேர்வில் சிறப்பாகச் செயல்பட வேண்டிய கட்டாயமும் அழுத்தமும் அவர்கள் மீது திணிக்கப்படுகிறது. பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோர்கள் கடன் வாங்குகிறார்கள். கல்வியை தொடர்ந்து கற்க பெரும் நிதிச் சுமையை சுமக்கிறார்கள். ஆனாலும், அதற்கான பலன் கிடைப்பதில்லை. இது ஓர் ஆழமான கட்டமைப்புச் சார்ந்த பிரச்சினை.
இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். வினாத்தாள் கசிவு என்பது ஏதோ ஒரு தேர்வில் மட்டும் நடப்பதல்ல. அது ஒவ்வொரு தேர்விலும் நடைபெறுகிறது. எனவே, நாம் அனைவரும் உண்மையாகவே மாணவர்களுக்கு துணை நின்று, ஆதரவளித்து, மாற்றத்தை உருவாக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.
வினாத்தாள் கசிவு காரணமாக மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிக்கொணரும் நோக்கில் பல்வேறு தொடர் மாநாடுகளுக்கு காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளது.
மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் இந்த மாநாடுகள் நடைபெற உள்ளன. நாளை (ஜூன் 17) ராஜஸ்தானின் கோடா நகரில் தொடங்கும் இந்த மாணவர்களுக்கான மாநாடு, தொடர்ந்து அலகாபாத் (ஜூலை 10), பாட்னா (ஜூலை 11), டெல்லி (ஜூலை 14) ஆகிய மாநகரங்களிலும் நடைபெற உள்ளது.
மாணவர்கள், இளைஞர்களுக்கான அமைப்புகள், கல்வியாளர்கள் மற்றும் தேர்வு மோசடியால் பாதிக்கப்படும் பலரும் பங்கேற்கும் வகையில் இந்த மாநாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## வானிலை முன்னறிவிப்பு: மதுரை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை, ஜூன்.17-
மதுரை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் நாளை (ஜூன் 17) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளிலிருந்து கேரள கடலோர பகுதிகள் வரை சுமார் 3.1 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜூன் 17) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.மேலும் நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.
ஜூன் 18ம் தேதி நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.
19ம் தேதி தெற்கு கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும். இதர தமிழக பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். 20ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 21ம் தேதி டெல்டா மற்றும் வட தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் லேசான மழையும் பெய்யக்கூடும். தமிழகத்தில் நாளை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
நகரின் அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 20ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி திருவண்ணாமலை மாவட்டம் செய்யாரில் 4 செமீ, சென்னை ஐஸ் ஹவுஸில் 3 செமீ, அரியலூர் மாவட்டம் செந்துறை, காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர், திருப்பூர் மாவட்டம் பல்லடம், திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றத்தில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# "2028க்குள் புதிய மாற்றுப்பாதை தயார்!" NHAI மண்டல அலுவலர் விரேந்தர் சம்பயால் விரிவான விளக்கம்!



சேலம், ஜூன்.17-
இந்திய தேசிய நெடுஞ் சாலை ஆணையம் (என்.எச்.ஏ.ஐ) சார்பில், தர்மபுரிசேலம் தேசிய நெடுஞ்சாலைப் (NH-44) பகுதியில் 6.6 கி.மீ நீளமுடைய மலைப்பாதை சாலை அமைப்பை மேம்படுத்தும் முக்கியத் திட்டம் விறுவிறுப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ.905 கோடியில் பிரம்மாண்ட உள்கட்டமைப்பு:இது குறித்து இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மண்டல அலுவலர் விரேந்தர் சம்பயால் சேலத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நாட்டின் முக்கிய வழித்தடங்களில் ஒன்றான தர்மபுரிசேலம் தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் கி.மீ. 158.500 முதல் 165.100 வரை யிலான மலைப்பாதையை மேம்படுத்தும் பணிகள் கலப்பு வருடாந்திர நிதி முறை அடிப்படையில் நடைபெறுகிறது. இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரூ. 905 கோடியாகும். இதன் ஒப்பந்த மதிப்பு ரூ. 548 கோடி ஆகும். இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் கடந்த 30 ஏப்ரல் 2024 அன்று கையெழுத்திடப்பட்டு, 21 மார்ச் 2025 அன்று பணிகள் தொடங்கப்பட்டன. இது வரும் 20 மார்ச் 2028 க்குள் முழுமையாக நிறைவடையும் வகையில் திட்டமிடப்ப ட்டுள்ளது. *மலைப்பாதையில் 6 வழிச்சாலை மற்றும் உயர்மட்ட மேம்பாலம்:*இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகத் தற்போதுள்ள நான்கு வழிச்சாலையானது ஆறு வழிச்சாலையாக விரிவுபடுத்தப்படவுள்ளது. மேலும், புதிய ஆறு வழிச்சாலை மாற்றுப்பாதை அமைத்தல், மலைப்பாதை பகுதியில் பிரம்மாண்ட உயர்மட்டச் சாலை (Elevated Road) அமைத்தல் மற்றும் கி.மீ. 163+100, 163+800 ஆகிய இடங்களில் தரம் வேறுபடுத்தப்பட்ட சந்திப்புகள் (Grade Separators) அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் மூலம் புதிய ஆறு வழிச்சாலையானது தற்போதைய தேசிய நெடுஞ்சாலையுடன் தடையற்ற முறையில் இணைக்கப்படும்.*41 சதவீதப் பணிகள் நிறைவு:*தற்போது இத்திட்டத் தின் ஒட்டுமொத்தப் பணிகளில் 41 சதவீதம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என்று மண்டல அலுவலர் தெரிவித்தார். இந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது திட்ட இயக்குனர் கே. ஸ்ரீநிவாசுலு மற்றும் ஊடக உதவியாளர் ஆர். சுஜாதா ஆகியோர் உடனிருந்தனர்.

# சிறுமிகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை தரைமட்ட அளவில் முதலமைச்சர் உறுதி செய்ய வேண்டும்!" காயல் அப்பாஸ் விடுத்துள்ள பரபரப்பு அறிக்கை!



காயல்பட்டினம், ஜூன் 17-
திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டியில் 3 வயதுச் சிறுமி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட கொடூரச் சம்பவத்திற்கு மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி தனது கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது.*பச்சிளம் சிறுமி கொலைக்குக் கடும் கண்டனம்:*இது குறித்து மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநிலத் தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி அருகே உள்ள சிப்காட் பகுதியில் பணிபுரிந்து வந்த வட மாநிலத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளியின் 3 வயதுப் பச்சிளம் சிறுமி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு, கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மிகுந்த வேதனையளிக்கிறது. இச்சம்பவத்தை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.
*நிவாரணமும் பிணையில்லாச் சிறைத்தண்டனையும்:*தற்போது தமிழகத்தில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது ஒட்டுமொத்தப் பெண் சமூகத்திற்கும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே, உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, அக்குடும்பத்திற்குத் தமிழக அரசு உடனடியாக ரூ. 50 லட்சம் நிவாரண நிதி வழங்க வேண்டும். மேலும், இந்த கொடூரக் குற்றத்தில் ஈடுபட்ட நபர்களைச் சட்ட ரீதியாகக் கடுமையான பிரிவுகளின் கீழ் கைது செய்து, அவர்களுக்கு எவ்விதப் பிணையும் வழங்காமல் சாகும் வரை சிறைப்படுத்த வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற குற்றங்களில் ஈடுபட நினைப்பவர்களுக்கு அது ஒரு பாடமாக அமையும்.*பாதுகாப்பை உறுதி செய்யக் கோரிக்கை:*
பிழைப்புத் தேடி வந்த இடத்தில் ஒரு பச்சிளம் குழந்தைக்குக் கூடப் பாதுகாப்பு வழங்க முடியாத அவலச் சூழல் நிலவுவது ஒட்டுமொத்தச் சமூகத்தின் தலைக்குனிவாகும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.50 லட்சம் நிவாரணம் வழங்கக் கோருவதும், குற்றவாளிகளைப் பிணையில் விடாமல் சாகும் வரை சிறையில் அடைக்க வேண்டும் என்று மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் தலைவர் காயல் அப்பாஸ் வலியுறுத்தியிருப்பதும் மிக நியாயமான கோரிக்கையாகும். தமிழக அரசு இதுபோன்ற வழக்குகளைச் சாதாரணக் குற்ற வழக்காகக் கருதாமல், சிறப்பு நீதிமன்றம் மூலம் போர்க்கால அடிப்படையில் விசாரித்து, குற்றவாளிகளுக்குக் கடுமையான மரண தண்டனை வரை பெற்றுத் தர வேண்டும்.
இனிவரும் காலங்களில் இதுபோன்ற கொடூரமான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க அரசு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும். குறிப்பாகச் சிறுமிகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை முதலமைச்சர், முழுமையாக உறுதி செய்ய வேண்டும் என அந்த அறிக்கையில் கறாராக வலியுறுத்தியுள்ளார்.



# ராஜகோபாலபேரி பகுதியைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திமுக வில் இணைந்தனர்

தென்காசி, ஜூன்.17-
தென்காசி தெற்கு மாவட்டம் சிவந்தி நகர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ராஜகோபாலபேரி பகுதியைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி, தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் தலைமையிலும், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் முன்னிலையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.நிகழ்ச்சியில் புதிதாக கழகத்தில் இணைந்த இளைஞர்களை மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் வரவேற்று வாழ்த்தினர். தொடர்ந்து, கழகத்தில் இணைந்த இளைஞர்களுக்கு கருப்புசிவப்பு வேஷ்டி அணிவித்து வரவேற்று கௌரவித்தனர்.மேலும், கழகத்தின் கொள்கைகள், மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் சமூகநீதிக் கொள்கைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் இளைஞர்கள் தீவிரமாக செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, ஜே.கே. ரமேஷ், ஷேக் முகமது ஆகியோர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாநகராட்சியில் பொதுமக்களுக்கான சுகாதாரக் கட்டமைப்புப் பணிகள் வேகம் எடுத்துள்ளன. மாநகராட்சி ஆணையர் எம்.பி. அமித் இ.ஆ.ப. மண்டலம் 3க்கு உட்பட்ட வார்டு 48, நல்லூர் பகுதியில் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இந்த மருத்துவமனைப் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அவர் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த ஆய்வின் போது, மாநகர நல அலுவலர் மரு. மோகன், உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணியன், இளநிலை பொறியாளர்கள் கௌதம், மணிகண்டன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திருப்பூர் மாவட்டத்தின் 14வது காவல் கண்காணிப்பாளராக சிருஷ்டி சிங் பொறுப்பேற்பு

திருப்பூர், ஜூன்.17-
திருப்பூர் மாவட்டத்தின் 14வது காவல் கண்காணிப்பாளராக சிருஷ்டி சிங் இ.கா.ப. திருப்பூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார்.



புதிய காவல் கண்காணிப்பாளர் அவர்கள் இளங்கலை அறிவியல் படித்துள்ளார். கடந்த 2022ஆம் ஆண்டு ஐ.பி.எஸ் பணிக்குத் தேர்வானவர். கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளராக பணியாற்றியுள்ளார்.
பின்னர் பதவி உயர்வு பெற்று, திருச்சி மாநகர காவல்துறையில் துணை ஆணையராக பணிபுரிந்து வந்தார். தற்போது திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டு, புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார்.



# திசையன்விளை பேரூராட்சியின் அடுத்தகட்ட உள்கட்டமைப்பு நகர்வு! வார்டு மக்களின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேற்றம்

திசையன்விளை, ஜூன்.17-
திசையன்விளை பேரூராட்சி வார்டு 6 மற்றும் 7க்கு உட்பட்ட உடன்குடி மெயின் ரோடு பகுதியில், பொதுமக்களின் அத்தியாவசியக் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் தண்ணீர் தொட்டி அமைக்கும் பணிகள் துவக்க ப்பட்டுள்ளன.*ரூ.4.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டம்:*திசையன்விளை உடன்குடி மெயின் ரோட்டில் அமைந்துள்ள இராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளி அருகில், ரூபாய் 4.50 லட்சம் மதிப்பீட்டில், 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய தண்ணீர் டேங்க் அமைப்பதற்கான ஆழ்துளைக் கிணறு தோண்டும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் திசையன்விளை பேரூராட்சி மன்றத் தலைவி ஜான்சிராணி முருகானந்தம் தலைமை தாங்கி, பணிகளை முறைப்படி தொடங்கி வைத்தார்.இவ்விழாவில் பேரூராட்சித் துணைத் தலைவர் ஜெயக்குமார், கவுன்சிலர்கள் அலெக்ஸ், பிரேம் குமார், முத்துகுமார், சண்முகவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், பிரதீப் ஸ்வீட்ஸ் அதிபர் முருகானந்தம், லயன் சுயம்புராஜன், மணலி ஆர்.எஸ். ராஜா, லிங்கராஜ், ரெத்னா ராஜ் குமார் மற்றும் வார்டு கவுன்சிலர்கள், அப்பகுதிப் பொதுமக்கள் எனப் பலர் திரளாகக் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.



# ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க கோரி ஆட்சியரிடம் விசிகவினர் மனு

தென்காசி, ஜூன்.17-
தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றியம் மீனாட்சிபுரம், மந்தியூர், அகம் பிள்ளையார்குளம் பகுதி ஆதிதிராவிடர் சமூகத்தைச்சார்ந்த மக்கள் இலவச வீட்டுமனை பட்டா வழங்க கோரி ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் முகாம் நாளான இன்று தென்காசி சட்டமன்றத்தொகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட துணைச்செயலாளர் கமல்துரை அரசு தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்க வருகை தந்தனர்.அம்மனுவில் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புலவனூர் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலம் நத்தம் சர்வே எண் 745/6ல் 100க்கு மேற்பட்ட நபர்களுக்கு வழங்க கூடிய நிலங்கள் அப்பகுதியில் உள்ளதால், மேற்படி நிலத்தில் இலவச வீட்டுமனை பட்டா நிலமாக 3 செண்ட் வீதம் வழங்கும்படி மனுவில் தெரிவி க்கப்பட்டுள்ளது இந்நிகழ்வில் விடுதலைச்சிறுத்தைகள் கட்சி மகளிரணி மாவட்ட செயலாளர் துர்காதேவி, தென்காசி நகர செயலாளர் ஹக்கீம், துணை செயலாளர் இளஞ்சேரன், கீழப்பாவூர் ஒன்றிய துணைச்செயலாளர் பிளம் சாமி, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி மாவட்டத் துணைச் செயலாள ர் சுந்தர்ராஜன் இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர் கஸ்தூரி உள்ளிட்ட விசிக நிர்வாகிகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# கோவையில் அரசு பணிமனை முன்பு தற்காலிக ஓட்டுநர்கள் , நடத்துநர்கள் போராட்டம்

கோவை, ஜூன்.17-
சுங்கம் அரசுப் பேருந்து பணிமனை முன்பு தற்காலிக ஓட்டுநர்கள், நடத்துநர்கள் முற்றுகைப் போராட்டம் மேற்கொண்டனர். பேருந்து பிரேக் டவுன் ஆனால் ஊதியத்தில் அதற்கான தொகை பிடித்தம் செய்யப்படுவதாகவும், பல ஆண்டுகளாக பணியாற்றும் தங்களை பணி நிரந்தரம் செய்யக் கோரியும் அவர்கள் கோஷம் எழுப்பி போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்

# "அன்னம் அளிப்போம்... அன்பை வளர்ப்போம்!" மதுரையில் பசிப்பிணி போக்கும் நகரத்தார் பெருமக்கள்!



மதுரை, ஜூன்.17-
மதுரை நகரத்தார் உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பில், பள்ளி மாணவ, மாணவிகளின் பசிப்பிணியைப் போக்கி ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் "காலை உணவு வழங்கும் நற்பணித் திட்டம்" மிகச் சிறப்பாகத் தொடங்கப்பட்டுள்ளது.
120 மாணவர்களுக்குக் காலை உணவு:மதுரை வசந்த நகரில் அமைந்துள்ள தியாகராஜர் மேல்நிலைப்பள்ளியில் கடந்த 04.06.2026 முதல் இத்திட்டம் வெற்றிகரமாகத் துவங்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் பயின்று வரும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் சுமார் 40 பிள்ளைகளுக்கும் மற்றும் இதர மாணவ, மாணவிகள் 80 பிள்ளைகளுக்கும் என ஆக மொத்தம் 120 மாணவ, மாணவிகளுக்குத் தினசரி காலை உணவு வழங்கும் நிகழ்வு பள்ளி வளாகத்தில் நடைபெற்று வருகிறது. ஆண்டு முழுவதும் 220 நாட்களுக்கு வழங்க ஏற்பாடு:இந்த 2026 2027ஆம் கல்வியாண்டில், பள்ளி செயல்படும் நாட்களான மொத்தம் 220 நாட்களும் இந்த நற்பணித் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்குத் தங்குதடையின்றித் தொடர்ந்து காலை உணவு வழங்குவதற்கு அறக்கட்டளை சார்பில் முழுமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த உன்னதமான நல்வாய்ப்பினை வழங்கிய வசந்த நகர் தியாகராஜர் பள்ளி நிர்வாகத்திற்கும், பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் அறக்கட்டளையின் அமைப்பாளர்கள் மற்றும் அறங்காவலர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளனர். மேலும், இப்புண்ணிய நற்பணியில் கலந்து கொள்ள விரும்பும் நகரத்தார் பெருமக்கள் மற்றும் நண்பர்கள் 98944 79908, 99945 34662, 99442 60198 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




■ மதுரையில் போக்குவரத்து இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு தெற்கு வாசல் சரக போக்குவரத்து சப்இன்ஸ்பெக்டர் கணேஷ் ராம் அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000